2026 பிப்ரவரி மாதம் 26– ஆம் தேதி வியாழக்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 136/2025

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26– ஆம் தேதி வியாழக்கிழமை திரு.P.அறிவழகன்,Translator அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW3 – சின்னபாண்டி |
| தகப்பனார் பெயர்: | முத்தையா தேவர் |
| ஊர்: | மாரியம்மன் கோவில் பட்டி |
| வட்டம்: | தேனி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | கூலி |
| வயது : | 56 |

26.02.2026

(எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

**முதல் விசாரணை:–**

1. நான் தேனி மாவட்டம், மாரியம்மன் கோவில் பட்டியில் வசித்து வருகிறேன். நான் பால் வியாபாரம் செய்கிறேன், எதிரிகளை எனக்கு தெரியும். இந்த வழக்கு சம்பவத்தில் இறந்து போன பால்பாண்டி உயிரோடு இருக்கும் போது பால்பாண்டி நன்றாக பால் வியாபாரம் செய்து வந்தார். வியாபாரம் நொடிந்து விட்டதால் எதிரி ராசாவிடம்ரூ.2,00,000/– கடன் வாங்கினார். 2 லட்ச ரூபாய் கொடுக்கும் போது ஆவணம் கேட்டுள்ளார். அப்போது என் தம்பி பால்பாண்டி 20 ரூபாய் பத்திரம் –2, கடனுறுதி சீட்டுகள்– 4 பால்பாண்டி அவரது மனைவி பாண்டியம்மாளும் சேர்த்து நிரப்பபடாத பத்திரத்திலும், கடனுறுதி சீட்டுகளிலும், கையொப்பமிட்டு தர வேண்டும் என்று எதிரி ராஜா கேட்டு கொண்டதன் பேரில் அவர்கள் கையொப்பம் செய்து கொடுத்தார்கள். அதன்பின்பு 5,6 மாதங்கள் வட்டி செலுத்தி வந்துள்ளார். அதன் பின்பு அசல் வட்டியும் கொடுக்க முடியாததால் ராசா, மொக்கப்பாண்டி, மணிமாறன், மணிவாசகம், செல்வகுமார், ஜெயமணி, கருப்பத்தேவர் ஆகியோர்கள் 2014 ஆம் வருடம் 6 June 2016 ஆம் தேதி

பால்பாண்டி வீட்டிற்கு வந்தார்கள். அந்த சமயத்தில் நான், என் தம்பி பக்கத்து வீட்டில் வசித்து வந்தோம். எதிரிகள் வந்து வட்டியும், அசலையும் கொடுக்குமாறு என் தம்பியிடம் பேசும் போது ராசா பால்பாண்டி வீட்டு இடத்தை மொக்கப்பாண்டி பெயருக்கு எழுதிக்கொடுக்கும் படி ராசா கேட்டார். பால் பாண்டி அதற்கு ஒப்புக்கொண்டு சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று ராசா கேட்டுகொண்டுதற்கிணங்க ராசாவின் அண்ணன் மொக்கப்பாண்டி பத்திரம் எழுதி கொடுத்தார். அப்போது நானும் உடன் இருந்தேன். பணத்திற்கு பதிலாக சொத்தை எழுதி கொடுத்துவிட்டதால் அவர் கையெழுத்துக்கு கொடுத்த பத்திரம், மற்றும் கடனுறுதி சீட்டுகளை பால் பாண்டி திருப்பி கொடுக்கும் படி கேட்டார். பணப்பட்டுவாடா ரசீதினை அவர்களிடம் பால்பாண்டி கேட்டார். ராசாக்கும் பால்பாண்டிற்கும் எந்த பண பரிவர்த்தனை இல்லை என்றும் சார் பதிவாளர் அலுவலகத்தில் பணப்பற்று ரசிது பதிவு செய்யப்பட்டது. 3 மாதங்களாக கையெழுத்திட்டு கொடுத்த பத்திரங்கள் மற்றும் கடனுறுதி சீட்டுகளை ராசா ஒப்படைக்கவில்லை. அதன் பின்னிட்டும் எதிரிகள் பால்பாண்டியின் வீட்டிற்கு அவ்வப்போது வந்த பணம் கொடுக்குமாறு தொந்தரவு செய்துள்ளனர். பணம் கொடுக்கவில்லை என்றால் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து சொத்துக்கள் அனைத்தையும் முடக்குவேன் என்று மிரட்டினார்கள். அவர்கள் மிரட்டியது போன்றே ராசா பால்பாண்டியிடம் 20 லட்சம் ரூபாய் கடன் வாங்கியது போல் ரூ.20 பத்திரத்தில் ஆவணம் தயாரித்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். மேலும், மணிமாறன் ரூ.20 பத்திரத்தில் 36 லட்சத்தி எண்பதாயிரம் கடன் வாங்கியது போல் பால்பாண்டி கையெழுத்து போட்டுகொடுத்த ரூ.20 பத்திரத்தினை உற்பத்தி செய்து வழக்கு தாக்கல் செய்தார்கள். சட்ட அறிவிப்பு அனுப்பிவிட்டு மணிமாறனும், ராசாவும் ஜனவரி 2015 ல் பால்பாண்டி விட்டிற்கு வந்து உங்கள் மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளோம், சொத்துக்கள் அனைத்தையும் முடக்கப் போகிறோம் என்று மிரட்டினார்கள். அதே மாதிரி 20 நாட்கள் கழித்து ஜெயமணியிடம் பால்பாண்டி ரூ.9 லட்சம் கடன் பெற்றதாக வெற்று கடனுறுதி சீட்டை தயாரித்து வழக்கு தாக்கல் செய்தார்கள். அதே போல் மகேந்திரனிடம் பால்பாண்டி ரூ.10 லட்சம் கடன் பெற்றதாக வெற்று கடனுறுதி சீட்டை தயார் செய்து வழக்கு தாக்கல் செய்துூர்கள். அதேபோல் செல்வகுமாரிடம் பால்பாண்டி ரூ.5 லட்சத்திற்கு காசோலை கொடுத்ததாக ஆவணம் தயார் செய்து நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார்கள். பிப்ரவதி 2015 ஆம் வருடம் எதிரிகள் அனைவரும் இரு சக்கரவாகனத்தில் பால்பாண்டி வீட்டிற்கு வந்தார்கள், அப்போது பால்பாண்டி பொது வீட்டிற்கு வந்தார், . அப்போது நானும், அம்மா பேச்சியம்மாள், அப்பா முத்தையா, என் மனைவி சரோஜா ஆகியோர் பொது வீட்டிற்கு வந்து விட்டோம். அப்போது எதிரிகள் அனைவரும் என் தம்பி பால்பாண்டியை தேவிடியா மகனே , காசு கொடுக்காதவன், காசு கொடுக்க வக்கு இல்லாதவன் மருந்தை குடித்து சாவுடா என்று திட்டி, ராசாவை தவிர மற்ற அனைத்து எதிரிகளும் வீட்டின் வாசல் முன் எச்சியை துப்பினார்கள். ராசா பால்பாண்டியை பார்த்து ஒன்னு நீ சாவு இல்லையென்றால் நான் சாவேன் என்று கையில் வைத்திருந்த வெள்ளை டாப்பாவிலிருந்த பூச்சி மருந்தை நீ குடித்து

விட்டு சாவு, உன் வீட்டை நான் பார்த்துகொள்கிறேன் இல்லை நான் குடித்து விட்டு சாகிறேன் என் வீட்டை நீ பார்த்துக்கோ என்று மிரட்டினார். நாங்கள் பணத்தை வாங்கி கொண்டு ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று கேட்டோம். அன்று காலையில் வந்து மிரட்டினார்கள், மாலையும் வந்து மிரட்டினார்கள். அவர்கள் திட்டி விட்டு சென்றதனால் தம்பி மன உலைச்சலுக்கு ஆளாகிவிட்டான். தம்பி விட்டில் இருந்தார். அதன் பின்பு வெளியே போது சமயத்தில் சிலம்பரசனும், அவரது மாமா வெள்ளைச்சாமியும் பால்பாண்டி இருசக்கர வாகனத்தில் செல்லும் போது பிடித்து கொண்டு சொத்தை எழுதிக்கொடு இல்லாயென்றால் மருந்தை குடித்து சாவு என்று மிரட்டினார்கள். தில்சன் அதே போன்று தம்பியை மிரட்டி வந்தார். தில்சனும், சிதம்பரமும் வந்து மிரட்டியதை என் தம்பி என்னிடம் கூறினார். அதிலிருந்து என் தம்பி பால்பாண்டி மிகவும் மனஉலைச்சலில் இருந்து வந்தார். 08.03.2015 ஆம் தேதி மாலை 4.30 மணிக்கு பால்பாண்டி மருந்தை குடித்துவிட்டார். நான் பால் வியாபாரத்திற்கு சென்று இருந்தேன். என் மனைவி சரோஜா எனக்கு தகவல் சொன்னார். பால்பாண்டியை ராஜேந்திரன், பாண்டியம்மாள், தவப்பாண்டி ஆகியோர்கள் அரசு மருத்துவமனைக்கு தம்பியை அழைத்து சென்றார்கள். நானும் எனது மனைவி சரோஜாவும் க.விலுக்கு அரசு கல்லூரி மருத்துமனைக்கு இரு சக்கர வாகனத்தில் சென்றோம். அங்கு சென்று பார்த்த போது பால்பாண்டியை ஐசியுவில் வைத்திருந்ததாக சொன்னார்கள். ராஜேந்திரனிடம் கேட்ட போது ஐசியுவில் இருக்கும் போது பால்பாண்டி இறந்து விட்டதாக சொன்னார். புகாரை டைப் செய்து வைத்திருந்தோம். புகாரை பாண்டியம்மாள் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள், நான் நடந்ததை சொன்னேன்.

**<u>1 முதல் 8 வரையிலான எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

2. என் தம்பி பால்பாண்டி யார், யாரிடம் கடன் வாங்கினார் என்று பால்பாண்டி சொல்லி எனக்கு தெரியும் என்றால் சரிதான். கூட்டு குடும்ப சொத்தை நாங்கள் 2015 ல் பாகப்பிரிவினை செய்துகொண்டோமா என்றால் பாகப்பிரிவினை செய்து கொண்டோம். எங்கள் குடும்பத்தில் அனைவரும் பாகம் பிரித்து கொண்டோம் என்றால் சரிதான். நான் போலிசார் விசாரணையில் பால்பாண்டி கடன் வாங்கி மற்றவர்களுக்கு வட்டிக்கு கடன் கொடுத்து வந்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பால்பாண்டி மருந்து குடித்தது ராசா, மகேந்திரன் மற்றும் ஜெயமணி ஆகியோர்கள் உரிமையியல் வழக்கு தாக்கல் செய்து அழைப்பாணை பெற்ற பின்பு என்றால் சரிதான்.

3. வழக்கு தாக்கல் செய்த விபரங்கள் அனைத்தும் அந்த வழக்கு விபரங்களை படித்து தொகைகைள தெரிந்து கொண்டோம் என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் எந்த குறிப்பிட்ட தேதி, மாதம், இடம் எதிரிகள் மிரட்டியதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் என் முன்னிலையில் வீட்டில் சத்தம் போட்டதை நான் சொன்னேன். மாரியம்மன் கோவில் பட்டியில் உள்ள வீடு இறந்த பால்பாண்டி கட்டியது என்றால் சரிதான். அந்த வீட்டில்தான் பால்பாண்டி, மனைவி மக்கள் குடியிருந்து வந்ததார்கள் என்றால் சரிதான். அந்த வீட்டில் பால்பாண்டியின் மனைவியும், மக்களும் தற்போது குடியில்லை என்றால் சரிதான். தற்போது பால்பாண்டி வீட்டின் மாடியில் எனது மகன் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான், ஒத்திக்கு குடியிருந்து வருகிறார். பால்பாண்டி இறப்பிற்கு பின்பு அவரது மனைவியும், மக்கள் மற்றும் சொத்துக்களை நானே பார்த்துகிறேன் என்று கூறி மிரட்டியதாகவும், அசா1 பயந்து கொண்டு மைதிரி சோசைட்டி ஹோமில் தஞ்சம் அடைந்தார் என்றால் சரிதான். மைதிரி சோசைட்டியில் ேஹாமில் எத்தனை நாட்கள் இருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. அதன் பிறகு அவர்களை மைதிரி சோசைட்டி ேஹாமில் தங்க விடாமல் புகார் கொடுத்து வெளியேற்றினேன் என்றால் சரியல்ல. போலிசார் மூலம் புகார் கொடுத்து மைதிரி சோசைட்டி ேஹாமிற்கு போலிசார் சென்றார்கள் என்றால் பேச்சியம்மாளும், முத்தையாவும் மனு கொடுத்தார்கள் அந்த மனுவின் பெயரில் போலிஸ் சென்று விசாரித்தார்கள். பாண்டியம்மாளை போலிசர் வீட்டிற்கு செல்லும்படி அறிவுறுத்தும் போது பாண்டியம்மாள் வீட்டிற்கு சென்றால் மருந்து குடித்து செத்து விடுவேன் என்று கூறியதால் ேஹாமில் பாண்டியம்மாள் இருந்தார்.

4. பால்பாண்டி இறந்ததை சாதகமாக பயன்படுத்தி அவர் வாங்கிய கடன்களை மோசடி செய்து பாண்டியம்மாள் மற்றும் பிள்ளைகள் எனது கட்டுப்பாட்டில் வைத்து சொத்தை அபகரிப்பதற்காகவும், பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அந்த நோக்கத்தில் பாண்டியம்மாளையும், பிள்ளைகளையும் ,

எதிரிகளையும் தொல்லை கொடுத்து வந்தேன் என்றால் சரியல்ல. புகாரை எழுதி டைப் செய்து வைத்திருந்தேன் என்றால் சரிதான். அதை நானும் பாண்டியம்மாளும் கொடுத்தோம். மொக்கப்பாண்டி பத்திரம் எழுதிய விபரமும் கிரைய எழுதிய விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் பால்பாண்டி சொல்லி தெரியும். எனது அண்ணன் பெரியபாண்டி மகள் பிரியா என்றால் சரிதான். பெரியபாண்டி இறந்து விட்டார் என்றால் சரிதான். பிரியாவின் பாகத்தை அவரது தகப்பனார் ஏற்கனவே எனக்கு கிரையம் கொடுத்ததாக சொல்லி பிரியாவிடம் மிரட்டி எழுதி வாங்கியதாக பிரியா உரிமையியல் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பொய் வழக்கு. பால்பாண்டியின் மனைவி விற்ற சொத்தை நானும், எனது தாயாரும் செல்லாது என்று கூறி அசல் வழக்கு எண். 39/2017 என்று மாவட்ட உரிமையில் நீதிமன்றம் தேனியில் தாக்கல் செய்து தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான்.

5. சொத்துக்களை அனுபவிப்பதற்காக நான் எந்த நடவடிக்கையும் எடுப்பேன் என்றால் சரியல்ல. அந்த எண்ணத்தில் தான் நடக்காத ஒரு விசயத்தை சொல்லி பொய் வழக்கு கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கொடுத்த பணத்தை சட்டப்படியாக நடவடிக்கை எ டுக்க பணம் கொடுத்தவற்கு உரிமை உண்டு என்ற நிலைமையில் பணத்தை கேட்டு மிரட்ட வேண்டி அவசியமில்லை என்றால் சரியல்ல. உரிமையியல் வழக்குகளில் பிரதிவாதிக்கு வழக்காட உரிமை உள்ளது என்றால் சரியல்ல. போலிசார் விசாரணையில் எதிரிகள் பால்பாண்டியை மிரட்டியது பால்பாண்டி சொல்லிதான் தெரியும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு வேண்டாத நபர்களின் தூண்டுதலின் பெயரில் நான் நடக்காத விசயத்தை நடந்ததாக சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் தாக்கல் செய்த வழக்குகளில் பாண்டியம்மாளுடன் சமரசம் தீர்பு மையம் மூலம் சமரசம் செய்து பேசி தீர்த்து கொண்டார்கள் என்றால் சரியல்ல. பாண்டியம்மாளை தனிமைப்படுத்தி என் வழிக்கு கொண்டு வரவேண்டும் என்பதால் நான் பழிக்குற்றச்சாட்டுகளில் வைத்து வருகிறேன் என்றால் சரியல்ல.

மணிவண்ணன், அருள்வாசகம், மொக்கப்பாண்டி ஆகியோர்கள் பால்பாண்டிக்கு பணம் கொடுத்ததாக எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கை வழுவுட்டுவதற்காக எதிரிகள் வீட்டிற்கு வந்து மிரட்டினார் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தம்பி பால்பாண்டியை மிரட்டியதாக நான் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான், பால்பாண்டி இறந்தவுடன் என்னை மிரட்டினார்கள், நான் புகார் கொடுத்தேன் புகாரை எடுக்கவில்லை.

6. நான் சென்னையில் உள்ள வழக்கறிஞர் சங்கத்திற்கு சென்று வழக்கறிஞர் மீது புகார் கொடுக்கும் அளவிற்கு ஞானம் உள்ளவர் என்பதால் உண்மையில் என்னை மிரட்டியிருந்தால் நான் உரிய நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றால் நடவடிக்கை எடுத்தேன்.

<u>9 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –</u>

7. முதல் விசாரணையில் 9 வது எதிரியும், அவரது மாமா வெள்ளைச்சாமி ஆகிய இருவரும் பால்பாண்டி இரு சக்கர வாகனத்தில் சென்ற போது ரோட்டில் வழிமறித்து மிரட்டியதாக கூறியது போல் போலிஸ் விசாரணையில் செல்லியுள்ளனா என்றால் சொல்லியுள்ளேன். புகார் மனுவிலும் சொல்லியுள்ளேன். அவ்வாறு குறிப்பிட்டு வெள்ளைச்சாமியையும் காண்பித்திருந்தால் அவரை இவ்வழக்கில் எதிரியாக சேர்த்திருப்பார்கள் என்றால் புகாரில் வெள்ளைச்சாமியை சேர்க்கவில்லை.

8. மேற்சொன்ன விபரத்தை நான் எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் என் தம்பி உயிரோடு இருக்கும்போது பிப்ரவரி 2015 ஆம் வருடம் என்னிடம் சொன்னார். நான் எனது தம்பியுடன் எதிரிகள் மிரட்டியதால் புகார் கொடு என்று அறிவுறுத்தினேனா என்றால் நான் சொன்னேன், அவரும் புகார் கொடுத்தார் ஆனால், எதிரிகள் பணபலம் மற்றும் அரசியல் பலம் உள்ளவர்கள் என்பதால் புகாரை எடுக்கவில்லை. சிலம்பரசன் என் தம்பி பால்பாண்டி மீது உரிமையியல் வழக்கு தாக்கல் செய்த பின்பு பால்பாண்டி மருந்தை குடித்துவிட்டார் என்றால் சரிதான். எனது போலிசார் விசாரணையில்

பால்பாண்டி மனைவி பாண்டியம்மாள் தான் மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நானும் எனது தம்பியும் தனிதனி குடும்பாக வசித்து வருகிறோம் என்றால் சரிதான். என் தம்பிக்கு உடல்ரீதியாக என்ன என்ன பிரச்சனைகள் இருந்து என்று எனக்கு முழுமையாக தெரியாது என்றால் அவர் உடல்ரீதியாக நல்ல நிலையில் இருந்தார்.

9. என் தம்பி உடல் நிலை சரியில்லாத போது அவருடைய மனைவியுடன் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்று வந்தார் என்றால் சரியல்ல. உண்மையில் பால்பாண்டிக்கு உடல் ரிதியாக ஏற்பட்ட பிரச்சனையின் காரணமாக தற்கொலை செய்து கொண்டார் என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் எதிரிகளை மிரட்டி பணம் பறிக்கவேண்டும் என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 9 வது எதிரிக்கும் இந்த வழக்கிற்கு எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரிகள் எந்த காலத்திலும் பால்பாண்டியை மிரட்டவில்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :– இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 26.02.2026 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.02.26 18:25:13 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
26.02.2026